ஊராட்சி தலைவர், ஆலம்பாடி ஊராட்சி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.சி.தென்னரசு எம்.ஏ.,எல்.எல்.பி., அவர்கள்

ந.க.எண்: 01/ 2023-2024 நாள்:30.01.2024

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - திண்டுக்கல் மாவட்டம் - குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம் - ஆலம்பாடி ஊராட்சி - புல எண்.776/2A,777/2B ல் 1.36 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.71, ஊரகம் மற்றும் உள்ளாட்சித் துறை நாள்:16.06.2003,
2. திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்: FQLVLHOE/2023/TCP நாள்: 22.08.2023
3. குஜிலியம்பாறை சார் பதிவகம், நன்கொடை ஆவண எண்: 2577/2023 நாள்: 05.09.2023
4. மனுதாரர் திரு.மு.பிச்சைமுத்து அவர்களின் விண்ணப்ப நாள்:01.11.2023
5. ஆலம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண்: 12 நாள்: 26.01.2024
6.வேடசந்தூர் சார்நிலை கருவூல சலான் எண்: 202402010130/68 நாள்: 01.02.2024
7.மனைப்பிரிவு கூர்ராய்வு கட்டணம் ரூ.20000/-(ரூபாய் இருபதாயிரம் மட்டும்)
8.மனைப்பிரிவு அங்கீகாரக்கட்டணம் ரூ.2000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)

உத்தரவு:

திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், ஆலம்பாடி ஊராட்சியில் புல எண்: 776/2A,777/2B ல் 1.36 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் கோரி பார்வை 2ல் காணும் விண்ணப்பத்தின்படி, திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர், திண்டுக்கல் மண்டலம் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. பார்வை 3 ல் காணும் விவரப்படி, இம்மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறுவதற்கு இம்மனைப்பிரிவினை அங்கீகரித்து ஆலம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண்: நாள்: .11.2023ன்படி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. பார்வை 2ல் காணும் திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்: FQLVLHOE/2023/TCP நாள்: 22.08.2023 ம் தேதி கடிதத்தின் படி மேற்படி இடத்தில் அமையும் வரைபடத்திற்கு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.ஊ.இ(திம) எண்: SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO:182/2023 எண்ணிடப்பட்டு இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக மனுதாரர் மனை அளவுகளை பிரித்தும், சாலைகள்

அமைத்தும், சாக்கடைகள் கட்டியும் அடிப்படை வசதிகளை மேற்கொண்டுள்ளார்.மேலும் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்ய வேண்டிய மனைப்பிரிவு சாலைகள், பொது விநியோகம் மற்றும் மின்சார வாரியத்திற்கான பயன்பாட்டு இடம் ஆகியவற்றை பார்வை 3ல் காணும் ஆவண எண்: 2577/2023 மூலம் ஆலம்பாடி ஊராட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO)க்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனையின் படி, மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.20000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) சலான் எண் 17349 நாள்:30.01.2024, மற்றும் நிலப்பயன் மாற்றக்கட்டணமாக, மனைப்பிரிவின் சந்தை மதிப்புத்தொகை ரூ.210000/-ல் 3% விழுக்காடு தொகை ரூ.7000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) சலான் எண்:202402010130068, நாள்01.02.2024, மனைப்பிரிவு அங்கீகாரக் கட்டணம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்), ஆலம்பாடி ஊராட்சி பொதுக் கணக்கில் இரசீது எண்: 17350 நாள்:30.01.2024 ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையிலும், திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் அடிப்படையிலும், ஆலம்பாடி ஊராட்சியில் புல எண்: 776/2A,777/2Bல் 1.36 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமையும் மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத்துறை உதவி இயக்குநர் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனையின் அடிப்படையிலும், அடிப்படை நிபந்தனைகள் ஏதேனும் விடுபட்டிருப்பின் அதனை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படகிறது.

தலைவர்

தலைவர்
ஆலம்பாடி ஊராட்சி,
குஜிலியம்பாறை ஒன்றியம்

குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம்,

திண்டுக்கல் மாவட்டம்.

பெறுதல்,

மு.பிச்சைமுத்து,
த.பெ.முருகேசன்,
145 B, முதலியார் தெரு,
அரவக்குறிச்சி,,
கரூர்-639201

நகல்:

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள், ஊராட்சி ஒன்றியம் குஜிலியம்பாறை.

2. உதவி இயக்குநர் அவர்கள், திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை அலுவலகம், திண்டுக்கல்.